தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24-12-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## அறுவடையின் போது சூரியகாந்தியின் விலை நிலையாக இருக்கும்

இந்தியாவில் சூரியகாந்தி மிக முக்கியமான எண்ணெய் வித்துப் பயிர்களில் ஒன்றாகும். சாகுபடிப் பரப்பு மற்றும் உற்பத்தி அடிப்படையில் எண்ணெய் வித்துப் பயிர்களின் மத்தியில் இது நான்காவது இடத்தைப் பெற்றுள்ளது. உலகளவில் 2013-14 ல் மொத்த சூரியகாந்தி விதை உற்பத்தி 42.77 மில்லியன் டன்களாக இருக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது. 2012-13ல் இதன் உற்பத்தி 36.40 மில்லியன் டன்களாக இருந்தது. உக்ரைன் (26.88 சதவீதம்), ரஷ்யா (23.37 சதவீதம்), ஐரோப்பிய ஒன்றியம் (19.93 சதவீதம்), அர்ஜென்டீனா (7.10 சதவிதம்), சீனா (5.72 சதவீதம்), துருக்கி (3.27 சதவீதம்), பர்மா (1.87 சதவீதம்) மற்றும் இந்தியா (1.87 சதவீதம்) ஆகிய நாடுகள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

இந்தியாவின் 2013-14 க்கான உணவு எண்ணெய் இறக்குமதியில் பாமாயில் 8.4 மில்லியன் டன்கள், சோயா எண்ணெய் 1.3 மில்லியன் டன்கள், சூரியகாந்தி எண்ணெய் 1.2 மில்லியன் டன்கள் மற்றும் இதர உணவு எண்ணெய் 10,000 டன்கள் இறக்குமதி செய்யப்படும் என இறக்குமதி முன்னறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் 2013-14 ஆண்டு கரீப் பருவத்தில் சூரியகாந்தி விதை உற்பத்தி 1.85 இலட்சம் டன்கள் ஆகும். இது 2012-13ல் 1.50 இலட்சம் டன்கள் ஆக இருந்தது. கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில் (2011-12)ல் சூரியகாந்தி பயிரிடும் பரப்பு 13,610 எக்டேராகும், இதன் உற்பத்தி 41,711 டன்னாக இருந்தது. தமிழ்நாட்டில் சூரியகாந்தி சாகுபடியின் நிலப்பரப்பில் 80 சதவீதத்தையும், உற்பத்தியில் 49 சதவீதத்தையும் கரூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் தருமபுரி ஆகிய

மாவட்டங்கள் பங்களிக்கின்றன. தமிழ்நாட்டில் தற்போது விவசாயிகள் சூரியகாந்தி விதைப்பதற்கு நிலத்தை ஆயத்தம் செய்து வருகின்றனர்.

சூரியகாந்தி விதைப்பு முடிவுகளை விவசாயிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையமானது, வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் சென்ற 13 வருடங்களாக நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராய்ந்தது. அறுவடை சமயத்தில் அதாவது மார்ச்-ஏப்ரல் 2014ல் ஒரு கிலோவுக்கு ரூ.34 முதல் 36 வரை இருக்கும் என ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளது. தற்போது சூரியகாந்தி விதையின் விலை கிலோவிற்கு ரூ.35 ஆகும். கடந்த வருடம் அறுவடைக் காலத்தில் (மார்ச் 2013 ல்) ஒரு கிலோவிற்கு ரூ.33-36 என்ற விலை நிலவியது. இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405

**<u>தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் :-</u>**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்-641 003
தொலைபேசி- 0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்